[2023 ஏப்ரல் 21

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு)*

3. தகவல் கோரல்

(அ) ஒகேனக்கல், காவேரி உபரிநீரை நீரேற்றம்மூலம் ஏரிகளில் நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு, நீண்ட நாட்களுக்கு முன்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில், (குறுக்கீடு) நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நான் சொல்லிவிடுகிறேன். எல்லோருக்கும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். விதி 55-ன்கீழ் மொத்தம் 666 அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது 785 கவன ஈர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில், 160 அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பதில் பெறப்பட்டவை 41. அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டவை 15. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். சிறப்புக் கவன ஈர்ப்பு மற்றும் தகவல் கோரல் 21 எடுக்கப்பட்டிருக்கின்றன. மீதி, பல பேர் கொடுத்திருந்தாலும் எல்லோருக்கும் பதில் வந்துவிடும். கொடுத்த அத்தனை பேர்களுக்கும் பதில் வந்து விடும். ஆகவே, ஒட்டுமொத்தமாக இன்றைக்கு எல்லோரும் பேசி, அதற்கு எல்லா அமைச்சர்களிடமிருந்தும் முழுமையாக பதில் பெற முடியுமா என்பது தெரியாது. ஓரளவு இந்த அவையில் அந்தப் பிரச்சினைகளைப் பற்றி ஒரு நிமிடத்திற்குள் பதிவு செய்வதற்கு மட்டும் நான் அனுமதிக்கிறேன். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும் 6 பேர்களின் பெயர்களைத் தந்திருக்கிறார்கள். அதனையும் தகவல் கோரல் என்ற அளவில் வைத்துக்கொள்கிறேன். எல்லா கட்சிகளைச்*

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

சேர்ந்தவர்களும், நான் சொல்கின்ற அடிப்படையில், பத்து நிமிடங்களுக்கு மிகாமல் அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில் வேறு இருக்கின்றது. 17 Bills pass செய்ய வேண்டும். அதில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்த அடிப்படையில் பேச வருபவர்கள் ஒரு நிமிடத்தில் உங்கள் பிரச்சினைகளை மட்டும் சொல்ல வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதனை நான் பதிவு செய்து கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மழையளவு மிகவும் குறைந்த மாவட்டமாக இருக்கின்ற, வேளாண்மையை மட்டுமே நம்பி வாழ்கிற, மானாவாரி பயிர் செய்து வாழ்கிற தருமபுரி மாவட்ட விவசாய மக்களின் வாழ்வாதாரமாக இருப்பது ஒகேனக்கல் காவேரி உபரி நீர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 538 டி.எம்.சி. காவேரி தண்ணீர் வீணாக கடலில் போய்ச் சேர்ந்துள்ளது. தருமபுரி மாவட்ட மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அந்த உபரி நீரை நீரேற்றம்மூலம் ஏரிகளுக்கு நிரப்பும் திட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில், கட்சிக்கு அப்பாற்பட்டு, அவரோடு பழகியவன், என்மீது பாசம் வைத்திருந்தார் என்கிற அடிப்படையில், அவரை நான் பெரிதும் மதிக்கிறேன், வணங்குகிறேன், போற்றுகிறேன். என் சார்பிலேயும் அவரை வணங்குகிறேன், மதிப்போம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையில், காவல் துறை பெண் காவலர்களுக்கு மாதவிடாய் காலங்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேட்பது இருக்கும்.